REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 24உ திங்கள் (7—1—57) ★ ★ வெளியீடு: மார்கழி 25உ செவ்வாய் (8—1—57) [இதழ் 181

'லிப்-ஸ்டிக் லேடி காங்கிரஸ்'

" சென்னை ஷெரீபாகக் காங்கிரஸ் நியமித்துள்ள கிளப் வாலா அம்மையார் எந்தப் போரில் ஈடுபட்டார்? தேசியக் கொடியை இறக்கும் போரில் ஈடுபட்டார்! பிரிட்டிஷ் துருப்புகளை இந்தியாவிலிருந்து வெளியேற்ற போர் நடந்து கொண்டிருந்தபோது — அந்தத் துருப்புகளுக்கு வசதி செய்துதரும் தொண்டாற்றி வந்திருக்கிறார்!

" இங்கே 'லிப்-ஸ்டிக்' லேடிகளிடம் காங்கிரஸ் பல்லைக் காட்டுகிறது........தேச விடுதலைக்காகத் தவங்கிடந்த உத்தமத்தாய்மார்கள் இன்று புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள்! தாய் நாட்டைத் தாங்கி நின்றவர்களை காங்கிரஸ் தட்டிக்கழிக்கிறது!"

—'சுதந்திரம்', 6—1—56

புள்ளிவிவரம்புரியாதோர்புலம்பல்!

★

"இன்றையத் தினம் தமிழ் நாட்டிலே நாம் விசித்திரமான ஒரு காட்சியைக் காண்கிறோம்—ஓராண்டுக்கு முன்பு வரை காண முடியாத ஒன்றை இன்று காண்கிறோம். வருகிற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு பக்கம் நிற்கிறது; மற்ற அத்தனைக் கட்சிகளும்—உலகிலேயே கடைந்தெடுத்த பிற்போக்குவாதிகளான காங்கிரசார் முதல் மிகச் சிறந்த முற்போக்குவாதிகள் என்று எண்ணிக்கொள்ளும் கம்யூனிஸ்டுகள் வரையிலும்—காங்கிரசின் தலைமையில் தி. மு. கழக எதிர்ப்பு அணியில் இருந்துவருகிறதைக் காணலாம்.

"சாதாரணமாக, பொதுத் தேர்தல்களில் பங்கு பெறும் ஒவ்வொரு கட்சியினரும், 'தேர்தலில் எங்கள் கட்சி கலந்துகொள்கிறது; நாங்கள் போட்டியிடுவதற்கான காரணங்கள் இன்னின்ன; வெற்றி பெற்றால் இன்னின்ன செய்வோம்; கல்வித் துறையிலே இன்னின்ன செய்வோம்; பொருளாதாரத் துறை அபிவிருத்திக்கு இன்னின்ன செய்வோம்' என்றுதான் சொல்லக்கூடும்.

"ஆனால் இங்கு நாம் பார்க்கிறோம்—கம்யூனிஸ்டுக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், 'நாங்கள் தேர்தலில் கலந்துகொள்கிறோம்' என்று குறிப்பிட்டுவிட்டு, அடுத்தாற்போல், 'தேர்தலில் கலந்துகொள்ளும் அதே நேரத்தில் திராவிட நாடு பிரிவினையை எதிர்த்துத் தீவிரப் பிரச்சாரமும் செய்வோம்,' என்று தெரிவித்திருக்கிறது. இதிலிருந்து நமக்கு ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. நாட்டில் உள்ள அத்தனை அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியையும், அதற்கிருக்கின்ற மக்கள் ஆதரவுப் பெருக்கத்தையும் கண்டு மருட்சியும், தங்கள் எதிர்காலம் பற்றிய நடுக்கமும் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான்.

அரசியல் அகம்பாவம்?

"மாநாட்டிற்கு முன்வரை நம்மைச் சாதாரணமாக நினைத்து, 'இவர்களுக்கெல்லாம் ஆதரவு ஏது? இவர்களெல்லாம் மக்களின் வேடிக்கைக்காகவும் பொழுது போக்கிற்காகவும்தான் இருக்கிறார்களே தவிர, மக்களுக்கு உழைப்பவர்கள் அல்ல' என்று நினைத்துத் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டனர். அந்த அரசியல் அகம்பாவம் அத்தனை பேருக்கும் இருந்து வருவதைக் காண்கிறோம்.

தியாக உள்ளத்தினர் அணிவகுப்பை கண்டனர்

மாநாட்டுக்குப் பின்னர் 'இந்த நாட்டின் விடுதலை இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான்—இந்த நாட்டில் உண்மையான குடியரசு மாளிகையை எழுப்பும் பரிசுத்தமான கழகம் தி. மு. கழகம் ஒன்றுதான்' என்பதை மக்கள் உணர்ந்துகொண்டுவிட்டனர் என்பதையும், தி. மு. கழகத்தின் ஜீவ இலட்சியங்களுக்கு தங்கள் உடல், உயிர், பொருள் அனைத்தையும் அர்ப்பணிக்கக் காத்திருக்கும் அணிவகுப்பையும் அவர்கள் கண்டனர்.

ஏசலையும் தூற்றலையும் இலட்சியமாகக்கொள்வதா?

குழம்பிய மனம் படைத்தோர் குற்றச்சாட்டை நாட்டு மக்கள் ஏற்க இயலுமா?

அமைச்சர்களின் பொறுப்பற்ற பேச்சு பற்றி ஈ. வெ. கி. சம்பத் விளக்கவுரை

மின்னல் வேகத்தில் அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்து, தி. மு. கழகத்தின் இலட்சியக் கோட்பாடுகளை மறைத்து, புள்ளிவிவரங்கள் பலவற்றை அறிந்தோ அறியாமலோ நாட்டு மக்களிடை குறைகூறிப் பிரச்சாரம் செய்யும் போக்கினை விளக்கி, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், சென்னை—4-வதுவட்டம் இளைஞர் முன்னேற்ற மன்றச் சார்பில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் நிகழ்த்தின சொற்பொழிவின் ஒருபகுதி இங்கு தரப்பட்டுள்ளது :—

"இப்படி தி. மு. கழகத்தின் பெருமையையும் ஆற்றலையும் ஒரு புறம் உணர்ந்துகொண்ட அதேநேரத்தில், இதுவரை இல்லாதமாதிரி நாம் தேர்தலில் ஈடுபடுகிறோம் என்று கேட்டதுமே சித்தம் கலங்கி, பேசுவது இன்னதென்று தெரியாமல் இடியுண்ட நாகம் போல் அலைந்துதிரியும் நிலைமையையும் நாம் காண்கிறோம்.

மிரட்சியுற்றோர் மின்னல் வேகப் பிரச்சாரம்!

"கடந்த சில தினங்களாகப் பத்திரிகைகளில் பார்க்கிறோம்; காமராசரும் மற்றும் சுப்பிரமணியமும் தி. மு. கழகத்தை எதிர்த்து ஆளுக்கொரு வாரமாக மின்னல் வேகத்தில் பிரச்சாரம் செய்து வருவதை! அந்த மின்னல் வேகத்தில் சென்னையிலிருந்து புறப்பட்டு திருநெல்வேலிவரை சென்ற அவர்கள் என்ன சொன்னார்கள்? நாமும் ஆவலோடுதான் பார்த்திருந்தோம்—'என்ன சொல்வார்களோ' என்று! இந்த நாட்டு மக்களை வடநாட்டுக்குக் காட்டிக் கொடுக்கும் கயமைத்தன்மையைப் பற்றியும் மற்றக் குறைகள் பற்றியும் காங்கிரஸ்மீது நாம் குற்றப் பத்திரிகை தயாரித்து மக்களிடம் எடுத்துக் கூறினோம். ஆனால், அமைச்சர்களோ, நாம் கூறிய குற்றச்சாட்டுகளுக்கு எந்தப் பதிலும் தரவில்லை. மாறாக நம்மீதே குற்றப் பத்திரிகை ஆயுதத்தைப் பிரயோகித்திருக்கிறார்கள்! அதில் சுப்பிரமணியத்தின் குரல்தான் உரக்க ஒலித்தது.

அமைச்சர் குற்றச்சாட்டில் அர்த்தமுண்டா?

"அவர்கள் நம்மீது சொன்ன முதல் குற்றச்சாட்டு என்ன? 'இந்த தி. மு. கழகம் என்பதென்ன தெரியுமா? — பெரிய படுபாதகச் செயலையல்லவா செய்திருக்கிறது? இதை மறந்துவிட்டீர்களே' என்று ஆரம்பித்தனர். கேட்ட மக்கள் கூட, 'ஏதோ, என்னவோ?' என்றுகூடத் திகைத்துவிட்டார்கள்! 'வெள்ளையன் வெளியேறும் போது இந்தத் தி. மு. கழகத்தினர் மவுண்ட்பேட்டனுக்கு ஒரு எக்ஸ்பிரஸ் தந்தி கொடுத்தார்கள்; அதில் நீங்கள் போகவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்கள்; இப்படிப்பட்டக் கொலைபாதகர்களுக்கா உங்கள் ஓட்டு?—என்று கேட்டாராம்! இதை வாய்கூசாமல் திருநெல்வேலியிலிருந்து மதுரை வரை சொல்லிவந்திருக்கிறார் அந்த அமைச்சர். இதைக் கேட்டதும் நமக்கேகூடக் கொஞ்சம் அதிர்ச்சி ஏற்பட்டது! ஏனென்றால், வெள்ளைக்காரன் இந்த நாட்டைவிட்டு வெளியேறினது—1947-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 15—என்பது நமது ஞாபகம்; திராவிட முன்னேற்றக் கழகம்தோன்றினதோ—1949-ம் வருடம் செப்டம்பர் மாதம் 17-ந் தேதி—அதுவும் நமது நினைவு! எப்படி இவ்வளவு பெரிய ஒரு புள்ளி விவரத் தவறு இந்த முக்கியமான மந்திரி பதவியில் இருக்கும் மேதாவிக்கு ஏற்பட்டது என்றுதான் தெரியவில்லை.

"ஒரு வேளை, இதைக் காமராசர் சொல்லியிருந்தால்கூட நமக்கு இவ்வளவு திகைப்பு ஏற்பட்டிருக்காது இவரோ, இந்த நாட்டின் நிதி மந்திரி—மதி மந்திரி—நீதிக்கும் மந்திரி; இந்த நாட்டில் எதற்கெல்லாம் பஞ்சமோ அதற்கெல்லாம் இவர்தான் மந்திரி. அப்படிப்பட்ட பெரியவருக்கு எப்படி இந்தத் தவறு ஏற்பட்டதோ?

"ஒரு வேளை, நமது கழகம் கொண்டுள்ள மிகுந்த செல்வாக்கைக்கண்டு, இவ்வளவு செல்வாக்கு படைத்த இந்தக் கட்சி தோன்றி குறைந்தது 14 வருடமாவது ஆகியிருக்கும்,' என்று நினைத்துக் கொண்டாரோ என்னவோ?

"இந்தக் குற்றச்சாட்டைத்தான் ஐந்து வருடமாகக் காத்திருந்து காத்திருந்து, இப்போது கம்பீரமாக மக்கள் முன்னிலையில் வீசி எறிந்துவிட்டார்!

நம்மை அறிந்த மக்களை ஏய்க்க இயலுமா?

"நம்மீது இரண்டாவதாக அவர்கள் கூறும் குற்றச்சாட்டு என்ன? 'தி. மு. கழகத்தின் வேடத்தைக் கண்டு பொதுமக்களே—நீங்களெல்லாம் மயங்கிவிடாதீர்கள்; இவர்களெல்லாம் யார் தெரியுமா? பழைய ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த சரிகைத் தலைப்பாக்கள், மிட்டா மிராசுகள் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் இப்போது புதுக் கோலத்தில்வந்து மக்களாகிய உங்களை ஏய்க்கப்பார்க்கிறார்கள்', என்பதுதான்!

"இதையெல்லாம் ஆப்பிரிக்காவில் இருப்பவர்களிடம் சொன்னால், வேண்டுமானால் அங்கிருப்பவர்கள் காது கொடுத்துக் கேட்டிருப்பார்கள். ஆனால் இங்கு, இவர்களை யார் என்று தெரிந்து வைத்துக்கொண்டிருக்கும் மக்களிடம் போய் 'இவர்களெல்லாம் யார் தெரியுமா?' என்று நம்மைப்பற்றிக் கூறுகிறார்கள்.

"மக்களிடம்போய் நம்மைப் பற்றி 'சரிகைக் குல்லாய்களின் பரம்பரை' என்று கூறுகிறாரே சுப்பிரமணியம்? சென்னை சட்டசபையிலே மந்திரிகள் வரிசையில் இவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறாரே மாணிக்கவேலர்—அவர் யார்? மாஜி ஜஸ்டிஸ் கட்சிச் சரிகைத் தலைப்பா; இன்று கதர் குல்லாயைப் போட்டுக்கொண்டிருக்கிறார்! இவர் என்ன தந்தி—தபால் நிலையங்களைக் கொளுத்தினவரா? தண்டவாளங்களைப் பெயர்த்தவரா? போன பொதுத்தேர்தல் வரையிலும் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்துவிட்டு, அதற்குப் பின்னர் இருந்த மிச்சம் மீதிகளில் ஒருவராயிற்றே!

அமைச்சர்களும் பரம்பரையின் இருப்பிடம்!

"அவர்தான் போகட்டும்; இன்னொருவர் இருக்கிறார் பரமேசுவரன்; அவர் யார்?—அவரது அரசியல் போக்குவரத்து என்ன? கடந்த 1942-ம் வருடத்தில் நடைபெற்ற உலக மகாயுத்தத்தின் போது கால் நடையாக டில்லிவரை சென்று சத்தியாக்கிரகம் செய்தவரா? 'ஏகாதிபத்திய அடிவருடிகள்' என்று நம்மைப்பார்த்துப் பேசும் அவர், அந்த நாட்களில் மாதச் சம்பளம்பெற்று வெள்ளைக்காரர்களுக்காக யுத்தப் பிரச்சாரமல்லவா செய்து வந்தவர்? இவர்கள் மட்டுமேல்ல—டில்லியிலும் ஒரு அமைச்சர்—டி. டி. கிருஷ்ணமாச்சாரி என்று ஒருவர் இருக்கிறார். அவர் யார்? ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு உதைபட்டவரா? உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு கடல் கடத்தப்பட்டவரா? பஞ்சாப் படுகொலையில் தப்பிப் பிழைத்தவரா? பழைய ஏகாதிபத்திய தாசர்கள், மிட்டா மிராசுகள், ஜமீன்கள் பரம்பரையெல்லாம் இப்போது எங்கே இருக்கிறார்கள்? இதே சட்டசபையில் இருக்கும் இராமநாதபுரம் இராசா யார்? இவர்களையெல்லாம் ஜஸ்டிஸ் கட்சிக் குட்டையிலே ஊறின மட்டைகள் என்றால்கூடப் பொருந்தும்!

"இவர்களையெல்லாம் அருகில் வைத்துக்கொண்டுதான் அமைச்சர்

(4-ம் பக்கம் பார்க்க)

'சுதந்திர' ஆட்சியில் இந்த நிலைமையா?

எதிர்க்கட்சி அஞ்சல்கள் தணிக்கை செய்யப்படுகின்றன?

ஹைதராபாத், சன. 6—ஐதராபாத்திலிருந்து அஞ்சல் மூலம் அனுப்பப்படும் சுற்றறிக்கைகள், சென்னைக்கு வந்தடைய ஏழு நாட்கள் ஆகின்றனவாம்!

இந்தத் தகவலை சோஷலிஸ்டுக் கட்சிச் செயலாளர் பிபின்பால் தாஸ் தெரிவித்திருக்கிறார்.

சோஷலிஸ்டுக் கட்சிக்கு வந்து போகும் கடிதங்கள் தணிக்கை செய்யப்படுகின்றன என்றும், இதனால் வீண் காலதாமதம் ஏற்படுகிறது என்றும் அக்கட்சிச் செயலாளர் பிபின்பால் தாஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், சோஷலிஸ்டுக் கட்சி எந்தவித இரகசிய நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்றும், இந்த வீண் தாமதத்தைத் தடுக்க கட்சி அலுவலகத்தில் எந்த நேரத்திலும் வந்து பகிரங்க சோதனையிடலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சட்டசபையில் பேசாமடந்தை!

லக்னோ, சன. 6—உத்திரப் பிரதேச சட்டசபை கடந்த ஐந்து ஆண்டுகளில் 453 - முறை கூடியுள்ளது. அக்கூட்டங்களில், சராசரியாக 332 உறுப்பினர்கள் வருகை தந்திருக்கின்றனர். எதிர்க் கட்சி உறுப்பினர்களின் வருகை திருப்திகரமாக இருந்தது ஆனால் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் மட்டும் 63 கூட்டங்களுக்கு வந்தார் என்று கூறப்படுகிறது.

அதிகப்படியாக வந்தவரும் ஒரு காங்கிரஸ் உறுப்பினராம்! அவர் 445 கூட்டங்களுக்கு வந்திருக்கிறாராம்.

ஆனால், இந்த 445 கூட்டங்களிலும் கலந்துகொண்ட அந்த உறுப்பினர், ஒரு கூட்டத்திலாவது—ஒருமுறையாவது வாய்திறந்து பேசினதே கிடையாதாம்!

ஒன்பதாண்டுக் காலத்தில் இயலவில்லை!

"இலவசக் கல்வி வசதியளிக்க வேண்டுமென்று நாம் எவ்வளவு விரும்பினாலும், போதிய பணமும் ஆசிரியர்களும் இல்லாத காரணத்தினால் நிறைவேற்ற முடியவில்லை," என்று, பண்டித நேரு கூறியுள்ளார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

மலர் 7—1—'57 திங்கள்

பொருந்தா சமாதானம்!

வடநாடு தொழில் வளத்தில் ஏற்கனவே முன்னேற்றம் பெற்றிருந்ததற்கும், தென்னடு தொழில் வளத்தில் பின்தங்கிக் கிடந்ததற்கும் சமாதானமாக இருநூறு ஆண்டுக்கால ஏகாதிபத்திய ஆட்சி சுட்டிக் காட்டப்படுகிறது.

எட்டு ஆண்டுக்கால சுதந்திர ஆட்சியிலும் அதே வேற்றுமை ஏன் நீடித்து இருக்க வேண்டும் எனக் கிளம்பும் கேள்விக்கு, இங்கு பெரு முதலீடு செய்து பெரும் பெரும் தொழில்களைத் துவங்கக்கூடிய பெரும் முதலாளிகள் இல்லை என்ற சமாதானத்தை இங்குள்ள 'பச்சைத் தமிழர்' அமைச்சரவை கூறிவருகிறது.

தனியார் துறைக்கென ஒதுக்கப்பட்ட தொழில்களுக்கு முதலீடு செய்து, தேவைப்படும் தொழில்களைத் துவங்க இங்கு பெரும் முதலாளிகள் இல்லை எனக் கூறப்படுவது பொருந்தக் கூடியதாகவே வைத்துக் கொண்டாலும், அரசாங்கத் துறைக்கென ஒதுக்கப்பட்டுள்ள கனரகத் தொழில்களை இப்பகுதித் தேவைக்கேற்ப இத்தென்னட்டில் துவங்க ஏன் இந்தியப் பேரரசு முன்வரக்கூடாது என எழுப்பப்படும் வினவிற்கு நியாயமான விடையளித்தாக வேண்டும். அப்பொறுப்பு இங்குள்ள 'பச்சைத் தமிழர்' அமைச்சரவைக்கும் இருந்துவருகிறது.

இதற்குப் பச்சைத் தமிழர் ஆட்சி கூறிவரும் சமாதானம் ஒன்றே ஒன்றுதான். கனரகத் தொழில்களைத் துவங்குவதற்கான எரிபொருள் இப்பகுதியில் கிடைக்கவில்லை; அதாவது நிலக்கரி இங்கு கிடைப்பதில்லை என்று சமாதானம் கூறுகிறது இந்த அமைச்சரவை.

நிலக்கரி இல்லாமல் போனால் என்ன; கிடைக்கும் மின்சாரத்தைக் கொண்டு கனரகத் தொழில்களை இப்பகுதியில் ஏன் துவங்கக் கூடாது என்று அடுத்து கேட்கப்படுகிறது. அதற்கும் ஏற்கனவே பச்சைத் தமிழர் ஆட்சி உருவாக்கிவைத்துள்ள உற்பத்தியாகும் மின்சாரம் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வரும் தொழில்களுக்கே போதுமானதாக இல்லாதிருக்கும்பொழுது, அப்பற்றுக்குறை மின்சாரத்தைக் கொண்டு புதிய தொழில்களை எப்படி துவங்குவது சாத்தியமாகும் என்ற மறுகேள்வி மூலம் சமாதானம் கூறிவருகிறது.

மின்சாரப் பற்றுக்குறையைப் போக்க ஏன் புதிய மின்சார உற்பத்தி வாய்ப்புகளைத் தேடிப் பிடித்து மின்சாரப் பெருக்கத்திற்கு வழி செய்யக்கூடாது என்ற கேள்வி எழுப்பப்பட்டால், இங்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய தன்மையில் உள்ள, வடநாட்டில் இருப்பது போன்ற சிவகதிகள் கிடையாது என்று பச்சைத் தமிழர் ஆட்சி சமாதானம் கூறுகிறது.

மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய அளவில் இங்கு பலப்பல சிவகதிகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இருக்கின்ற ஒரே ஒரு குந்தா நீர்தேக்க மின்சார உற்பத்தித் திட்டத்தை ஏன் இதற்கு முன்னரே தொழில்படுத்தி இருக்கக்கூடாது என்ற கேள்வியை அடுத்தபடி கேட்கவேண்டியதாகிறது.

இந்த நியாயமான கேள்விக்கு உருட்டு விழியைத்தான் நமக்குச் சமாதானமாக்கி வருகிறது பச்சைத் தமிழர் ஆட்சி!

இதற்க, அந்த அளவுடனும் நின்றுவிடாது, 'தொழில் துறையில் வடநாடு வளர்ந்திருக்கிறது—தென்னடு தேய்ந்திருக்கிறது என்றெல்லாம் வேற்றுமைப் படுத்திப் பேசாதீர்கள். தொழில்கள் வடநாட்டிலிருந்தாலும் தென்னட்டிலிருந்தாலும் அது நம் அனைவருக்கும் பொதுச் சொத்தாகும். இப்படி கருதும்—கூறும் பரந்த மனவளம் வேண்டும் நமக்கெல்லாம்'—என்று ஒற்றுமைக்கீதம் எழுப்பக் கிளம்பிவிடுகிறது பச்சைத் தமிழர் ஆட்சி!

இச்சமரச கீதத்தை ஆக்கி அளித்துவருவது பச்சைத் தமிழர் ஆட்சி அல்ல. இதை முதல் முதலாக ஆக்கித்தந்தது இந்தியப் பேரரசாகும்.

"'வடக்கு—தெற்கு' என்ற பேதம் கற்பிப்பது கூடாது; தேசத்தின் எந்த மூலையில் அபிவிருத்தி ஏற்பட்டாலும் தேசத்திற்கே அபிவிருத்தி ஏற்பட்டது போன்றதாகும்; வங்காளச் சணல், பீகார், அசாம் எண்ணெய் தேசத்திற்கே பொதுவுடைமை. சுயநலக்காரர்களின் பேதமேற்படுத்தும் கோஷங்களைப் பொதுமக்கள் நம்பவேண்டாம்" என்று கனரகத் தொழில் மந்திரியான மனுபாய் ஷா திருநெல்வேலியில் சில நாளைக்கு முன் பேசி இருக்கிறார்.

இவ்வாறு பேசி இருப்பது அவர் மட்டுமல்ல; அவருக்கு முன் தமிழ் நாட்டிற்கு வந்து போன மொரார்ஜி தேசாயும இதே மாதிரியில்தான் பேசி விட்டுப் போயிருக்கிறார்.

பீகார் நிலக்கரி, தேசத்தின் பொதுவுடைமை என்று அமைச்சர் ஷா பேசுகிறார். அது எவ்வளவு தூரம் நடைமுறைக்கு ஒத்ததாக இருக்கிறது என்பதை ஆராய்வோம்.

எடுத்துக்காட்டாக, சேலத்து இருபைப் பயன்படுத்துவதற்கான ஒரு உருக்குத் தொழிற்சாலையை உடனடியாகத் துவங்குவதற்குப் பெருந்தடையாக இருந்துவருவது நிலக்கரிப் பஞ்சமே காரணம் என்று அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி முதற்கொண்டு அமைச்சர் சுப்பிரமணியம வரை கூறிவந்திருக்கின்றனர். பீகாரின் நிலக்கரி இந்தியத் துணைக் கண்டத்தின 'பொதுவுடைமை'யாகும் என ஷா கூறுவதுபோல் இந்தியப் பேரரசு இதுவரை எண்ணி இருக்குமானால், சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை துவங்காமல் இருப்பதற்குக காட்டப்பட்டுவந்த நிலக்கரிப் பற்றுமை காரணத்தைக் காட்டாமல் இருந்திருக்கவேண்டும். அதுவுமன்றி, பீகார் நிலக்கரியைக் கொண்டு ஏற்கனவே உருக்குத் தொழிற்சாலை ஒன்றையும் இந்தியப் பேரரசு துவங்கி இருக்கவேண்டும். அப்படி செய்யப்பட்டிருந்தால், பீகார் நிலக்கரி 'தேசத்தின் பொதுவுடைமை' என்ற அமைச்சர் ஷாவின் கூற்று முழுவதும் உண்மையானதாகும என எவரும் நம்புவது எதிர்பார்க்கக்கூடும்.

ஆனல், பீகார் நிலக்கரியின் 'பொதுவுடைமை'த் தன்மையோ. பீகார் இடம் பெற்றுள்ள வடநாட்டிற்குப் பயன்படும் அளவுடன் நின்றுவிடுவதைத்தான் நாம் நடைமுறையில் கண்டுவருகிறோம். வடநாட்டு எல்லை வரம்புக்குள் மட்டுந்தான் பீகார் நிலக்கரியின் 'பொதுவுடைமை'த் தன்மை செயல்படுவதாக இன்று இருந்துவருகிறது.

பீகார் நிலக்கரியின் 'பொதுவுடைமை'த் தன்மை மேலும் கொஞ்சம் விரிந்து சேலத்திற்குப் பயன்படக்கூடியதாக இல்லை. எதிர்காலத்திலாவது சேலத்திற்குப் பயன்படக்கூடிய வகையில் பீகார் நிலக்கரியின் 'பொதுவுடைமை'த் தன்மை விரிவடையக்கூடுமா என்பதற்கும் இடம் கிடையாது. நிற்க,

வடநாட்டிற்கு மட்டுமே நல்ல பலனளித்துவரும் பீகார் நிலக்கரியின் 'பொதுவுடைமை', பொதுவாகத் தென்னட்டின் தொழில் வளத்திற்கும குறிப்பாகச் சேலத்து உருக்குத தொழிலுக்கும் பயன்தரக் கூடியதாக இல்லை. எதிர்காலத்தில் இருக்கப்போவதுமில்லை.

எனவே, பீகார் நிலக்கரியின் 'பொதுவுடைமை' மாற்றான் தோட்டத்து மலர் போன்றது தான்.

இந்தியப் பேரரசும், நமது பச்சைத் தமிழர் அமைச்சரவையும, எவ்வகையிலும் நமக்குப் பயன்படக்கூடியதாக இல்லாத அம்மலரைக் காட்டும அதன நறுமணம் பற்றிச் சிறப்பித்துக் கூறுவதும, ஏமாற்றுவித்தையேயாகும! அது, நமது நியாயமான கேள்விகளுக்குக் கூறப்பட்டுவரும பொருந்தா சமாதானமேயாகும்!

தமிழ் நாட்டில் சிறுதொழில் வளர்ச்சிக்கும் டில்லி தரும் தொல்லை!

உருக்குத் தேனிரும்பு, நிலக்கரி முதலியன சென்னைக்குத் தரப்படுவதில்லை

மத்திய மந்திரியிடம் முறையீடு

சென்னை, ஜன. 3—

தமிழ் நாட்டில் உள்ள சிறு தொழில்கள், தங்களுக்குத் தேவைப்படும் கட்டுப்படுத்தப்பட்டுள்ள பொருள்களான நிலக்கரி, தேனிரும்பு, உருக்கு முதலிய பொருள்கள் கிடைக்காமல் திண்டாடுகின்றன என்றும், இந்தப் பொருள்கள் உற்பத்தியாகும் இடத்திலிருந்து (வடநாட்டிலிருந்து) இவை கிடைப்பது கடினமாயிருக்கிறது என்றும், போக்குவரத்து வசதிக் குறைவு வேறு பெருந்தடையாயிருக்கிறது என்றும், எனவே, டில்லி சர்க்கார், விநியோக ஸ்தலங்களில் நிரம்ப 'ஸ்டாக்' சேகரித்து சிறு தொழில்களுக்குத் தரவேண்டும் என்றும் சென்னை சிறு தொழில் சங்கத்தவர், மத்திய நுகர்ப் பொருள் உற்பத்தி இலாகா மந்திரி நித்தியானந்த கனுங்கோவிடம் முறையிட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

'பெருந்தொழில்கள், கனரகத் தொழில்கள்தான் இல்லை; அதனல் என்ன? சிறு தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்துங்கள்,' என்று உபதேசம் புரிவோர், சென்னை மாநிலத்தில் சிறு தொழில் வளர்ச்சிக்குக்கூட டில்லி உதவுவதில்லை—உதவ முடிவதில்லை என்பதை விளக்கும் வகையில் அமைந்துள்ள இந்த முறையீட்டை உணர்ந்து பார்க்கவேண்டும்.

தேனிரும்பு, உருக்கு, நிலக்கரி போன்ற—டில்லி சர்க்காரின் கட்டுப்பாடான விநியோகத்திலிருக்கும் பொருள்கள், சென்னை தொழில்களுக்குக் கிடைப்பதில்லை என்பது, வேறு எல்லாத் துறைகளிலும் தமிழ் நாடு வஞ்சிக்கப்படுவதைப் போன்றே இத்துறையிலும் வஞ்சிக்கப்படுகிறதோ என்ற ஐயப்பாட்டிற்கு உறுதுணையாகிறது.

உறுப்பினர் நாடுகளிடம் ஐ. நா. சபை கோரிக்கை

நியூயார்க், சன. 3—

சூயஸ் கால்வாய் மராமத்துக்கு ஒரு கோடி டாலர் கடனுதவி அளிக்குமாறு உறுப்பினர்களாக உள்ள நாடுகளிடம் ஐ. நா. சபை கேட்டிருப்பதாகத் தெரிகிறது. 50 இலட்சம் டாலர்வரை தருவதற்கு அமெரிக்கா சம்மதித்துள்ளதாம்.

வனஸ்பதி சோஷலிசம்

காட்கில் எச்சரிக்கை

இந்தூர், ஜன. 4—

"வனஸ்பதியை 'தாவர நெய்' என்று கூறுகிறார்கள். 'நெய்' என்ற வார்த்தையை உபயோகித்திருந்தாலும்கூட, அது ஒரு தாவரப் பொருள் என்பதை மறந்துவிடுவதற்கில்லை!

"இந்த வகையில், சோஷலிசம் என்பது வார்த்தையளவில் வந்துவிடாது. இந்த 'வனஸ்பதி சோஷலிச'த்திலிருந்து காங்கிரஸ் காப்பாற்றப்பட வேண்டும்

"முதலாளிகளாயுள்ள காங்கிரசார், காங்கிரசின் சோஷலிசக் கொள்கையைச் சீர்குலைக்கப் பார்க்கிறார்கள்"

என்று, என் வி. காட்கில், காங்கிரஸ் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் கூறினார் என்று தெரியவருகிறது.

வட ஆப்பிரிக்காவில் நுழைய அமெரிக்கா முயற்சி?

வாஷிங்டன், சன. 4—

வட ஆப்பிரிக்காவிலுள்ள பெரும் பகுதி நிலங்களை மீட்டுப் பண்படுத்தி நைல் நதியின் அபிவிருத்தியை மேற்கொள்ளும் திட்டமொன்று அமெரிக்கத் தலைவரின் மத்தியக் கிழக்கு சமாதானத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கக் கூடுமாம்.

இந்தத் திட்டத்தின்கீழ் நைல் நதி நெடுக மத்திய தரைக் கடல் வரையில் பல அணைக்கட்டுகளும், நீர்ப்பாசனத் திட்டங்களும், நீர்—மின்சாரத் திட்டங்களும் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

'சோஷலிசம்' பற்றி வார்த்தைகளைக் குழப்பும் காங்கிரசின் போக்கு!

பேராசிரியர் கார்வே கண்டனம்

ஐதராபாத், சன. 3—

"காந்தியார் தலைமையிலிருந்த காங்கிரஸ், 'ஒரு கூட்டுறவு காமன்வெல்த் அமைப்பதே இலட்சியம்' என்றுகூறியது.

"பின்னர் இது, 'சோஷலிச மாதிரி சமூக அமைப்பு' என்று கூறப்பட்டது.

"இப்போது, 'முழுக்க முழுக்க சோஷலிசமே' என்று சொல்லப்படுகிறது.

"'மாதிரி' என்பது உண்மையான பொருளைவிடத் தரக்குறைவானது என்று கருதப்பட்டதுபோலும்!

"இந்தக் கஷ்டங்கள் எழுவதற்குக் காரணம், இலட்சியம் குறித்துக் காங்கிரசாருக்கு உறுதியான நோக்கம் இல்லை என்பதேயாகும்"

என்று, பிரபலப் பொருளாதார நிபுணரான பேராசிரியர் டி. ஜி. கார்வே என்பார் இங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கூறியிருக்கிறார்.

ரஷ்ய யோசனைக்கு இரு நாடுகள் எதிர்ப்பு

படைபலக் குறைப்புப் பற்றி நான்கு வல்லரசுகளும், இந்தியாவும் கொண்ட ஒரு மாநாட்டை நடத்தலாம் என்று ரஷ்யப் பிரதமர் கூறிய யோசனையை பிரெஞ்சுப் பிரதமர் மோலே நிராகரித்து விட்டாராம!

பிரிட்டனும் அந்த யோசனையை நிராகரித்துவிட்டு, வேண்டுமானல ஐ. நா.-வில் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தலாமென்று கூறியிருக்கிறது.

இப்படி ஒரு திட்டமா?

இராமேசுவரத்திற்கு வருபவர்கள் தங்குவதற்கான விடுதிகள் கட்டுவதற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசாங்கம் ரூ. $1\frac{1}{2}$ இலட்சம் ஒதுக்கியுள்ளது.

பணக்காரர்கள் தங்குவதற்கென ஒரு விடுதியும், ஏழைகள் (நடுத்தர வகுப்பினர்) தங்குவதற்கென மற்றொரு விடுதியும் கட்டப்படுமெனத் தெரிகிறது.

மாறிவரும் நிலைமையை உணரக் கோரிக்கை

'எகிப்தில் ஆக்கிரமிப்பு நடந்திருக்கிறது; ஆனல் பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகள் இப்போது வெளியேறிவிட்டன 'உலகம் மாறி வருகிறது; பழைய எதேச்சாதிகாரமுறை மலையேறிவிட்டது; நடைமுறைகள் யாவும் மாறிவருகின்றன' என்பதையே இந்த வெளியேற்றம் சுட்டிக் காட்டுகிறது அங்கேரியில் 11 அல்லது 12 ஆண்டுக் காலமாகக் கம்யூனிஸ்டு ஆட்சி நடந்து வந்திருக்கிறது; அங்கு இப்பொழுது மக்கள் எழுச்சிக் குரல் கேட்கிறது. பலவந்தமாகத் திணிக்கப்படும் எந்த முறையும் எப்போதும் நிலைத்து நிற்காது" என்பதை உலக நாடுகள் உணர வேண்டுமென பண்டிதர் எச்சரித்துள்ளார்

பஞ்சாயத்துக்கள் நிலை பற்றி சர்க்கார் உத்தரவு

சென்னை, சன. 3—

கடந்த ஆண்டில் 5,000 பேருக்குக் குறையாத மக்கள் தொகையும், ரூ. 10,000-க்குக் குறையாத வருமானமும உள்ள பஞ்சாயத்துக்கள் முதல்தரப் பஞ்சாயத்துக்களாகக் கருதப்படும் என்று சென்னை அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பீடித் தொழிலாளருக்குப் பாதுகாப்புத் தரும் அவசரச் சட்டம் வேண்டும்

விசைத்தறித் திணிப்பைக் கைவிடக் கோரிக்கை

தி. மு. கழகப் பொதுக் குழு முடிவுகள்

கடந்த 30-12-56 அன்று சேலம் நகரில் நடைபெற்ற தி.மு.க. பொதுக் குழுவின் முடிவுகளில் சில ஏற்கனவே வெளியாகியுள்ளன; எஞ்சிய தீர்மானங்கள் கீழே தரப்படுகின்றன :-

8. செயற்குழு கூட்டங்கள்

9—9—56, 29-12-56 ஆகிய நாட்களில், முறையே சென்னையிலும் சேலத்திலும் நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டங்களின் நடவடிக்கைகளையும், தீர்மானங்களையும் இப்பொதுக் குழு ஏற்றுக்கொள்கிறது.

—தலைவர்

9. மாநில மாநாட்டு வரவு-செலவுக் கணக்கு

திருச்சியில் மே திங்களில் நடைபெற்ற தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டின் வரவு-செலவுக் கணக்குகளை இப்பொதுக் குழு ஒரேமனதாக ஏற்றுக்கொள்கிறது.

—மு மொ. : சி. பி சிற்றரசு
—வ. மொ. : கே. கே நீலமேகம்

10. தலைமை நிலைய வரவு-செலவுக் கணக்கு

1956 சனவரி முதல் நாளிலிருந்து 1956 ஜூன் 30-ம் நாள் வரையிலும் தலைமை நிலையத்தின் வரவு-செலவுக் கணக்குகளை இப்பொதுக் குழு ஏற்றுக்கொள்கிறது.

—மு மொ. : ஜி பி. சோமசுந்தரம்
—வ. மொ. : எஸ் முத்து

11. தமிழக எல்லைப் பிரச்சினை

தேவிகுளம், பீர்மேடு, செய்யாற்றின்கரை, கொச்சிச் சித்தூர் பாலக்காடு ஆகிய தாலுகாக்களிலுள்ள தமிழ்ப் பகுதிகளையும், ஆந்திரா மாநிலத்தின் சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளையும் தமிழகத்தோடு இணைக்க வேண்டும் என்றும், சென்னை மாநிலத்திற்குத் தமிழ் நாடு எனப் பெயரிட வேண்டும் என்றும் பல வகைகளிலும் வற்புறுத்தி வந்தும், அவற்றிற்கான முயற்சி எதும் எடுக்காத சென்னை அரசியலாரின் போக்கை வன்மையாகக் கண்டிப்பதுடன், இப்பிரச்சினையில் தமிழ் மக்களுக்குப் பெருந்துரோகம் விளைவிததுள்ள இந்திய அரசியலாரின் போக்கினையும் இப்பொதுக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

—தலைவர்

12. கைத்தறிப் பிரச்சினை

கைத்தறித் தொழிலையே நம்பியிருக்கும் இலட்சக்கணக்கான ஏழை மக்களின் வாழ்வை, விசைத்தறி புகுத்தும் திட்டம் இப்பொழுதுள்ள சூழ்நிலையில் மிகவும் பாதிக்கும் என்று இப்பொதுக் குழு திட்டவட்டமாகக் கருதுவதால் உடனடியாக விசைத்தறி புகுத்தும் திட்டத்தைக் கைவிடுமாறு அரசியலாரை இப்பொதுக் குழு வற்புறுத்துகிறது.

—தலைவர்

13. பீடித் தொழிலாளர் பிரச்சினை

பீடித் தொழிலாளர்கள் தங்களுக்கு ஒரு பாதுகாப்புச் சட்டம் தேவை என்று பல ஆண்டுகளாகக் கோரி வந்தும், இது குறித்துக் காங்கிரஸ் ஆட்சியினர் அக்கறை கொள்ளாமல் புறக்கணித்துவரும் போக்கினை வன்மையாகக் கண்டிப்பதுடன், உடனடியாகப் பீடித் தொழிலாளர் பாதுகாப்பு அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்து அத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் உரிமை வழங்குமாறு இப்பொதுக் குழு அரசியலாரை வற்புறுத்துகிறது

—மு. மொ : எம். எஸ் மணி
—வ. மொ. : ஐ எம் ஷெரீப்

‘விற்பனை வரி வரம்பை உயர்த்துவோருக்கே எங்கள் ஓட்டு’

குடந்தை வர்த்தகர் சங்க முடிவு

குடந்தை, சன. 3—

“விலைவாசிப் புள்ளியையொட்டி, விற்பனை வரிக்கு விதிக்கப்படும் வரம்பு உடனடியாக உயர்த்தப்பட வேண்டும். உணவுப் பொருள்களுக்குப் பூரண வரி விலக்களித்து, சாத்தியப்பட்ட பொருள்களுக்கெல்லாம் முதல் கட்டத்தில் மட்டும் விற்பனை வரி விதிக்கப்பட வேண்டும். இந்தக் கோரிக்கைகளுக்கு எந்த அரசியல் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உரிய இடம் அளிக்கிறதோ, அந்தக் கட்சிக்குத்தான், வருகிற பொதுத் தேர்தலில், வர்த்தகர்கள் தங்கள் வாக்குகளைக் கட்டுப்பாடாக அளிக்க வேண்டும்”

என்று, சென்ற மாதம் 30-ந் தேதியன்று, குடந்தையில் நடைபெற்ற நகர வர்த்தக சங்க வருடாந்திரப் பொது உறுப்பினர் கூட்டத்தில், மேற்படி சங்கத்தின் மூன்றாவது ஆண்டு அறிக்கையை வாசித்த சங்கச் செயலாளர் குறிப்பிட்டார்

சங்கத் தலைவர் திரு. கே. ஆர். எம். எஸ். சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில், மேற்படி கருத்தினை, உறுப்பினர்கள் அனைவரும் ஒருமுகமாக வரவேற்றிருக்கின்றனர்.

இறுதியில் சங்க வரவு-செலவுக் கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டபின், திரு. கே ஆர். எம். எஸ். சொக்கலிங்கம் அவர்களைத் தலைவராகக்கொண்ட 1957-ம் ஆண்டுக்கான புதிய சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (ந. தி.)

கரூர் தபால்-தந்தி ஊழியர் கண்டன ஊர்வலம்

கரூர், சன 4—

கரூரிலுள்ள தபால்-தந்தி ஊழியர்கள், தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்துமுகத்தான் சென்ற 2ந்தேதியன்று சம்பளம் வாங்க மறுத்ததுடன், அன்று மாலை கண்டன ஊர்வலமும் நடத்தியிருக்கின்றனர்.

பின்னர் அங்குள்ள பள்ளியொன்றில், திரு. என். இரத்தினம் எம்.எல்.ஏ. தலைமையில் பொதுக் கூட்டம் நடத்தித் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தியுள்ளனர். தபால்-தந்தி ஊழியர்கள் குறை குறித்துத் தோழர்கள் சுந்தரம், மணி சு. ப. அருணாசலம், கோவிந்தராஜ், நாராயணசாமி, அஜீஸ், எம். கே. அமிர்தலிங்கம், கே. எஸ். சோமு ஆகியோர் பேசினர். (ந. தி.)

சென்னை மகளிர் மன்ற விவாத அரங்கு

25—12—56ல் சென்னை மகளிர் மன்றச் சார்பில், எண். 77 வரதா முத்தியப்பன் தெருவில், விவாத அரங்கு தோழியர் சுலோசனா-சிற்றரசு தலைமையில், ‘குடும்பச் செலவு யாரால் அதிகம்?—ஆண்களாலா, பெண்களாலா?’—என்ற தலைப்பில் நடைபெற்றது.

‘பெண்களால் அதிகம்’ என்று தோழியர்கள் ஜி. பி அமுதா, கிருஷ்ணவேணி-பாலன், ந. நா நித்தியவாணி, இராசம்பாள், சுந்தரம்பாள் — இளஞ்செழியன் ஆகியோரும், ‘ஆண்களால்தான் அதிகம்’ என்று தோழியர்கள் தாமரைச் செல்வி, சி. பி. சி. சாந்தா, ஆர். சகுந்தலா, மங்கையர்க்கரசி, இரா. ச. சகுந்தலா ஆகியோரும் பேசினர்.

இறுதியில் ஓட்டெடுப்பு நடைபெற்றது; ‘ஆண்களால்தான் அதிகம்’ என்று பெருவாரியான ஓட்டுகளால் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் தோழியர்கள் தாமரைச்செல்வி, மங்கையர்க்கரசி, இரா. ச சகுந்தலா, ச ஜெயா, சி பி சி. சாந்தா, சுலோசனா-சிற்றரசு, ர. சகுந்தலா, கிருஷ்ணவேணி-பாலன், மேரி, சுந்தரம்மாள்-இளஞ்செழியன், ஜி. பி அமுதா, ந நா. நித்தியவாணி, கலைச்செல்வி, தனலட்சுமி-குப்புசாமி, எஸ்தர்-தாசன், இராசம்மாள், சுசிலாதேவி, என். ஆலிஸ் ஜி. அம்பிகா, எஸ். விசயலட்சுமி, எஸ். ஐ சுசிலா, ஜெகஜோதி-நாகராசன் கலந்துகொண்டனர்.

இறுதியில் தோழியர் சத்தியவாணி முத்து அவர்கள், விவாதம் எந்த முறையில் இருக்கவேண்டும் என்று விளக்கி, அடுத்த மகளிர் மன்றக் கலை நிகழ்ச்சி 15-1-57ல் செயிண்ட் மேரிஸ் மண்டபத்தில் நடைபெறும் என்றும் அறிவித்து, கலைநிகழ்ச்சியில் பெருவாரியான தாய்மார்கள் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

நஞ்சகவுண்டம்பாளையம் ஆதிதிராவிட மக்களுக்குக் குடியிருப்பு வசதி

சர்க்காருக்குக் கோரிக்கை

கோபி, சன 3—

வீரபாண்டி கிராமத்தைச்சேர்ந்த நஞ்சகவுண்டம்பாளையத்திலுள்ள ஆதிதிராவிட மக்கள் வாழும் பகுதி மழையினால் பாதிக்கப்பட்டு பெருஞ்சேதமடைந்துள்ளது.

பாதிக்கப்பட்ட அம்மக்களுக்கு, வெள்ளாளபாளையம் கிராமத்தில் ஒதுக்கப்பட்டுள்ள 8 ஏகர் நிலத்தில், அரசாங்கச் செலவில் வீடுகள் கட்டிக்கொடுக்குமாறு, கடந்த மாதம் 31-ந் தேதி இரவு இங்கு பெரியார் மைதானத்தில், நகர தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற தேர்தல் நிதி அளிப்புப் பொதுக் கூட்டத்தில் சர்க்காரைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மேலும் அக்கூட்டத்தில், மழையால் பாதிக்கப்பட்ட கோபி—வெங்கடாசலம்பேட்டை வாசிகளுக்கும் சர்க்கார் உடனடி நிவாரணம் தருமாறும், கீழ்பவானி விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டத்தீர்வை முழுவதையும், பயிர்க் கட்டுப்பாடுகளையும் சர்க்கார் உடனடியாக நீக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது

டாக்டர் அம்பேத்கார், இசைப் பெரும் புலவர் இராசரத்தினம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது. (ச-தி.)

உடனடியாக வீட்டு வரி குறைக்கப்படவேண்டும்

சின்னாளபட்டி பஞ்சாயத்துக்கு பொதுமக்கள் கோரிக்கை

சின்னாளபட்டி, ஜன. 4—

கடந்த மாதம் 3-ந் தேதி நடைபெற்ற ஊராண்மைக் கழகக் கூட்டத்தில வீட்டு வரி குறைப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்குப் பாராட்டு தெரிவித்தும், அந்தத் தீர்மானத்தை உடனடியாகப் பஞ்சாயத்தார் அமுல் நடத்தாவிட்டால வரிகொடா இயக்கம் நடைபெறவேண்டிய நிலை ஏற்படும் என்று எச்சரித்தும், கடந்த 28-ந் தேதி இங்கு தோழர் எஸ் அவாரதாஸ் தலைமையில் நடைபெற்ற தி. மு கழகப் பொதுக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் தோழர்கள் டி. கே. சீனிவாசன், எஸ். மெய்யப்பன் ஆகியோர் பேசினபின், தோழர் ஏ. எம். டி. காசிப்பன் தீர்மானங்களை வாசித்தார்.

சின்னாளபட்டி பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி, இந்த ஆண்டுக்கு (1956—57) வீட்டு வரி என்ற பெயரில் பல மடங்கு அதிகமாக வரி விதித்திருப்பதைக் கண்டித்தும், மேற்கூறப்பட்ட பஞ்சாயத்துத் தீர்மானங்களை அமுல் நடத்தத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ச-தி)

பஞ்சாயத்து நிர்வாகத் துறை!

கலெக்டர்களிடம் தரக்கூடாதென கோரிக்கை

செயங்கொண்டம், சன. 5—

பஞ்சாயத்துக்களின் நிர்வாக அதிகாரம், மாவட்டக் கலெக்டர்களிடம் தரப்படும் என்று அண்மையில் சென்னை சர்க்கார் வெளியிட்ட வெள்ளையறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனைக் கண்டித்து, அவ்வாறு பஞ்சாயத்து நிர்வாகம் கலெக்டர்களிடம் விடப்படுமானால் உடையார்பாளையம் பஞ்சாயத்துத் தலைவர்கள் அனைவரும் இராஜினாமாச் செய்வர் என்று சர்க்காரை எச்சரித்து இங்கு நடைபெற்ற உடையார்பாளையம் தாலுகா பஞ்சாயத்துத் தலைவர்கள் மாநாடொன்றில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

பஞ்சாயத்துத் தலைவர்கள் பொதுமக்களாலேயே தேர்ந்தெடுக்கப்படவேண்டியவர்கள் என்பதும் அம்மாநாட்டில் சர்க்காருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

மாவட்டத் திட்டக் குழுவிற்கும் பஞ்சாயத்துக்கள் சார்பில பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் சர்க்காரை வற்புறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்னர் நடைபெற்ற சங்கப் புதிய செயலாளர்கள் தேர்வில் திரு. கி. சுந்தரமூர்த்தி, பி. வெங்கடாசலம் ஆகிய இருவரும் புதிய செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (ச. தி)

ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி

கரூர் நகரசபைத் தீர்மானம்

கரூர், சன 4—

கரூரிலுள்ள பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு, முதல் படிவத்திலிருந்து (6-வது வகுப்பு) எஸ். எஸ். எல். சி.-வரை சம்பளம் பெறாமல் இலவசமாகப் பயிற்சி தருவதெனக் கரூர் நகரசபை தீர்மானித்திருக்கிறது!

கடந்த 2-ந் தேதி, நகரசபைத் தலைவர் திரு என். இராமானுசம் தலைமையில் நடைபெற்ற நகரசபைக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவெடுக்கப்பட்டதுடன், மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கரூர் தலைமை தண்ணீர் நிலையத்தில் மின்சார விளக்குப் போடுவதற்குத் தாமதமாவது குறித்து தி.மு கழக உறுப்பினர் என். ஆர். இராமசாமி, மற்றும், தோழர் காசிமுத்து ஆகியோர் கேட்ட கேள்விக்கு, நகரசபைத் தலைவர் பதிலளிக்கையில், அவ்வேலைக்குத் திறமையும் அனுபவமும் பெற்ற ஆள் தேவைப்படுவதாலேயே வேலை காலங்கடந்து வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அடுத்து, நகரசபைக் கூட்ட நடவடிக்கைகள் ஒழுங்காக நடைபெறும் பொருட்டு சில விதிமுறைகளைத் திருத்தி அமைக்கும் தீர்மானத்தின் மீதும் பல உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியிருக்கின்றனர். (ச. தி)

தூத்துக்குடியில் குடிதண்ணீர் வசதி

நகராண்மைக் கழகத்தினரிடம் முறையீடு

தூத்துக்குடி—

தூத்துக்குடி நகரில் யாதவர் தெரு, தெற்கு வாணியன் வீதி தெரு ஆகிய இரண்டு தெருக்களிலும் பெருவாரியான மக்கள் வசித்து வருவதால், போதுமான அளவு குடிதண்ணீர் வசதி அப்பகுதியில் கிடைக்கவில்லை. எனவே, அப்பகுதியில் உடனடியாகப் பைப்புகள் ஏற்படுத்துமாறும், அதுவரை லாரிகளின் மூலம் நீர் விநியோகம் செய்யுமாறும், நகர 18-வது வார்டில் முன்பிருந்த நகராண்மைக் கழகம் லாரி மூலம் தண்ணீர் விநியோகித்ததை இப்போதைய நிர்வாகம் ரத்து செய்துவிட்டதைக் கண்டித்தும், குடிதண்ணீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுவதால் மீண்டும் லாரிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யுமாறு நகராண்மைக் கழகத்தினரைக் கேட்டுக்கொண்டு தூத்துக்குடி மக்கள் மறுமலர்ச்சி மன்றக் கூட்டம் ஒன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. (ச-தி.)

கீ. இராமலிங்கனருக்கு பாராட்டு விழா

பொன்னாடை போர்த்திப் பட்டம் வழங்க ஏற்பாடு

மதுரைத் திருவள்ளுவர் கழக வேண்டுகோள்

மதுரை, சன. 4—

தமிழ் மொழியில் பேசுவதற்கு அருவருப்புக் கொண்டவர்கள் காலத்திலேயே, ‘மூவேந்தர் ஆண்ட மொழி மூவாத் தமிழ் மொழியே’ என்பதை பல மேடைகளில் எடுத்துக் காட்டியும், அதன்பின், தாம் பல நகரங்களில் ஆணையாளராக இருந்த காலத்தில் தமிழ் மொழியிலேயே ஆட்சியைச் செம்மையுற நடத்திச் சென்றவரும், ஆங்கிலச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களை உருவாக்கினவருமான முன்னாள் ஆணையர் செந்தமிழறிஞர் கீ. இராமலிங்கனார் அவர்களது தமிழ்த் தொண்டினைப் பாராட்டி சிறப்பிக்க, வருகிற இத்திங்கள் 15-ந் தேதியன்று பொன்னாடை போர்த்திப் பட்டம் வழங்குவதென மதுரை திருவள்ளுவர் கழகத்தார் ஏற்பாடு செய்துள்ளனர்.

இதற்குப் பொருளுதவி செய்ய விரும்பும் அனைவரும், ‘கே. பழனியப்பா அவர்கள், தலைவர், மதுரை திருவள்ளுவர் கழகம், 48. மேலமாசி வீதி, மதுரை’ எனும் முகவரிக்கு அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

காங்கிரசை எதிர்க்க!

அரசியல் தியாகிகள் நடவடிக்கை

மதுரை, சன. 5—

வருகிற பொதுத் தேர்தல்களில் தமிழ் நாட்டு சிறை சென்ற அரசியல் தியாகிகளும் கலந்துகொள்வர் என்று தெரிகிறது.

சட்டசபைகள், பாராளுமன்றம் ஆகியவைகளுக்குப் போட்டியிடும் அபேட்சகர்களின் இறுதிப் பட்டியலைத் தயாரிக்க, வருகிற 13-ந் தேதியன்று இங்கு அரசியல் தியாகிகள் தேர்தல் துணைக் குழுக் கூட்டம் ஒன்று நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், நேரடி போட்டிக்கான வாய்ப்புகளுக்காகவும், அரசியல் தியாகிகள், அவர்களது ஆதரவு பெற்றோர் ஆகியோர் போட்டியிடும் தொகுதிகளில் மற்றக் கட்சியினரின் போட்டிகளைத் தவிர்க்கவுமாக, இதர கட்சிகளின் தலைவர்களையும் முக்கியஸ்தர்களையும் சந்தித்துப்பேச இருப்பதாக அக்குழுச் செயலாளர் கே. இராமன் அறிவித்திருக்கிறார்.

சம்பத் விளக்கவுரை...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சுப்பிரமணியம் நம்மைப் பார்த்து, 'சரிகைத் தலைப்பா வாரிசுகள்—ஜஸ்டிஸ் கட்சியிலுள்ள மிச்சம் மீதிகள்' என்று சொல்கிறார்!

அண்ணா நிபந்தனைக்கு அதுவா பதில்?

அடுத்தாற்போல், மதுரைக்கு வந்தார்; அவர் பேசுவதற்கு இரண்டொரு தினங்களுக்குமுன் அண்ணா அவர்கள் மதுரைக்குச் சென்று ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார்கள். அதில், 'தி. மு கழகம் தேர்தலில் ஈடுபடுகிறது என்று கேள்விப்பட்டதுமே மாற்றுக் கட்சியினர் குலை நடுக்கம் கொண்டிருக்கிறார்கள்; ஏன் இந்தக் குலை நடுக்கம்? இதைத் தவிர்க்க ஒரு மாற்று யோசனை கூறுகிறேன். நாங்கள் தேர்தலில் நிற்பதாலேயே உங்களுக்குக் குலை நடுக்கம் எடுக்கிறதென்றால், நாங்கள் தேர்தலில் ஈடுபடப் போவதில்லை. ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை; என்ன அந்த நிபந்தனை? இங்கிருக்கிற மந்திரிசார் டில்லி சென்று, இந்த நாட்டின் பொருளாதாரத் திட்டஅபிவிருத்திக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2,000 - கோடி ரூபாய் பெற்று வரட்டும்; இந்தத் தேர்தலில் வேண்டுமானால் நாங்கள் நிற்கவில்லை' என்று அண்ணா கூறினார்கள்.

"இதைக் கேட்டதும் சுப்பிரமணியத்திற்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது! உடனே சவால் விடும் தோரணையில் பேசினார்:—'இந்த அண்ணாதுரைக்கு என்ன தெரியும்? பொருளாதாரத்தில் 'அ, ஆ' கூடத் தெரியாது; எனக்குத்தான் 'ஃ' வரை தெரியும்; நான் 2,000 கோடிரூபாய் புரட்டிக் கொண்டு வருகிறேன். அந்தப் பணத்திற்கு இந்த அண்ணாதுரை திட்டம் தீட்டித் தரட்டும்; அந்தத் திட்டம் சரிதான் என்று அயல் நாட்டு நிபுணர் ஒருவர் கூறட்டும்; அது பொருத்தமானதுதான் என்று அவர் கையெழுத்துப் போட்டுவிட்டால், நான் எனது மந்திரி பதவியை இராஜினாமாச் செய்துவிடுகிறேன்' என்று மார் தட்டிப் பேசினார்!

"இதைக் கேட்டதும் நாமே கூடக் கொஞ்சம் அதிர்ச்சியடைந்தோம்! தேவிகுளம், பீர்மேடு, வடக்கெல்லைப் பிரச்சினைகளில் எல்லாம் மிகமிக ஜாக்கிரதையோடு பதவியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்த இவருக்கு, தருமருக்கு வந்த தைரியம்போல், இப்போது மட்டும் இந்தத் தைரியம் எப்படி வந்தது என்று ஆச்சரியப் பட்டோம்! அப்படி யோசித்துக் கொண்டிருந்தபோது எதிரே மாட்டிக்கிடந்த காலண்டர் நம்மைப் பார்த்துச் சிரித்தது! 'இது கூடவா தெரியவில்லை? இவர் இந்த மந்திரியாக இன்னும் 90 நாட்கள் தானே இருப்பார்?' என்று கேட்டு சிரித்தது!

"அண்ணா அவர்கள் திட்டத்தை வேறு நாட்டு நிபுணர் ஆராய்ந்து அது சரிதான் என்று கூறுவதற்குள், இப்போது 'அமைச்ச'ராக இருக்கிற சுப்பிரமணியம் அப்போது அப்படி இருக்கமாட்டார்; வெறும் சுப்பிரமணியமாக இருப்பார்! அந்தத் தைரியத்தில்தான் சவால்விட்டுப் பேசியிருக்கிறார்.

(நாளையும் வெளிவரும்)

கம்யூனிஸ்டுகளுக்கும் தேவையில்லையாம்!

புதுடில்லி, சன 6—வானொலி மூலம் தேர்தல் பிரசாரம் செய்வதற்கு அரசியல் கட்சிகளுக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகையை பி. சோ. கட்சி ஏற்கனவே நிராகரித்துவிட்டது; இப்போது கம்யூனிஸ்டு கட்சியும் இந்தச் சலுகையை தங்களுக்குத் தேவையில்லை என்று அறிவித்துவிட்டதாம்!

தி. ந. சம்பந்தம் சுற்றுப்பயணம்

சன. 8 : மதுராந்தகம்
9 : கவுள்பசார்

தேர்தல் நிதி தாரீர்!

வரவு :	ரூ.	அ.	பை
முன் (28—12—56) இதழ்ப்படி	35,038—	2—	1
உதகை எம். மதுரை	3	0	0
குன்னத்தூர் எம். இராசன்	3	0	0
சத்தியவிசயநகரம் தி. மு. கழகம்	5	0	0
சின்னாளப்பட்டி ஏ. எம். டி. நாச்சியப்பன்	5	3	0
திருப்பாபுலியூர் கே. சோமசுந்தரம் ...	8	0	0
திண்டுக்கல் கே. வி. கே. சாமி படிப்பகம்	8	1	0
முடிச்சிக்காடு (தஞ்சை, தி. மு. கழகம்	10	5	0
திருவனந்தபுரம்சாலை-சா. வி. மு. நம்பி	10	0	0
இலுப்பூர் (தேலூர்) தட்சணாமூர்த்தி	14	0	0
திருவனந்தபுரம்சாலை-சிவராஜ்	15	0	0
சிவகங்கை தி.மு. கழகம் கே. சுப்பிரமணியன்	20	0	0
அக்காமலை—வால்பாறை இ. இராமசாமி	20	0	0
மதுரை-மதுரைக் கல்லூரி பெரி. நெடுஞ்செழியன் ...	21	4	0
மேலூர் (மதுரை) தி.மு. கழகம் ப. தங்கவேலர்	40	0	0
தளவாய்புரம் தி. மு. கழகம் மா. முத்துச்சாமி	60	0	0
கம்பம் தி. மு. கழகம்	50	0	0
சிவந்திபுரம் விவசாயிகள்	10	0	0
விக்கிரமசிங்கபுரம் தி. மு. கழகத் தோழர்கள்	15	0	0
ஏழுமலை (தி. மு. க.) கே. அனந்தகிருஷ்ணன்	13	8	0
இலத்தூர் இ. திருமலைக்குமார்	10	0	0
பாளையம்பட்டி தி. மு. கழகம்	10	0	0
சென்னசமுத்திரம் தி. மு. கழகம் தி. முனுசாமி	10	0	0
புலியஞ்சுவனம் தி. மு. கழகம்	5	0	0
வேதபுதூர் அண்ணா படிப்பகம் நா. சு. இளங்கோ முதலியோர்	3	0	0
மேலூர் ப. பொன்னையா	1	0	0
27—12—56 தண்டரை—பட்டாபிராம் கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மூலம் :—			
அம்பத்தூர்-சுந்தரமணாளன்	3	1	6
லோகோஷெட் பக்கிரிசாமி ...	0	4	0
கே. எஸ். முத்து	1	0	0
விருதம்பட்டு அனுதாபி	1	0	0
எம். எஸ். வேலாயுதம்	1	0	0
தின்னனூர் தி.மு.க. அனுதாபிகள் சார்பாக	62	11	11
தண்டரை—பட்டாபிராம் தி. மு. கழக அனுதாபிகள்	101	0	0
ஆவடி கோவிந்தசாமி	6	0	0
பாலவேடு வ. உ. சி. கழகம் வெங்கடேசன்	1	1	0
பிறை பி. டபிள்யு. டி. ராஜாராம்	3	0	0
வங்கனூர் தி. மு. கழகம் கே. நரசிம்மன்	5	0	0
குளத்தூர் (நெல்லை) தி. மு. கழகம்	20	0	0
மேலக்கற்கண்டார்கோட்டை (பொன்மலை) தி. மு. கழகம்	42	2	0
கண்டமானடி கே. வி. கே. சாமி மன்றம்	5	0	0
காளையார்கோயில் தி. மு. கழகம	5	0	0
கீழ்நம்மங்குறிச்சி(தஞ்சை) பி. சிதம்பரசபாபதி....	25	0	0
பெரியகளாம்பாடி (வ. ஆ.) தி. மு. கழகம்	10	1	0
புஞ்சைசத்தலையூர் (கோவை) தி. மு. கழகம் கே. சைனுமுகம்மது	25	0	0
தேவாரப்பன்பட்டி (மதுரை) தி. மு. கழகம்	50	0	0
மதுரை பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ.வெ.கி. சம்பத் அவர்களிடம் அளித்த தொகை	164	0	0
31—12—56 கோபிசெட்டிபாளையம் பொதுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மூலம்	282	2	6
கே. பழனிவேலு	5	0	0
இராமலிங்கபுரம (இராமநாதபுரம்) தி.மு. கழகம்....	20	0	0
தென்காசி தி. மு. கழகம்	50	0	0
திருப்பயர் (திருச்சி) தி. மு. கழகம் பி. ரங்கராசன்	10	10	0
நாமக்கல் க. சின்னுசாமி ...	17	0	0
தண்ணீர்பந்தல்பாளையம் சந்தானகிருஷ்ணன்	1	0	0
தாண்டனூர் டி. பி. துரைசாமி	3	3	0
நாச்சியார்கோயில் தி. மு. கழகம்	2	0	0
வள்ளுவர் மன்றத் தோழர் .... மு. கோதண்டபாணி	1	0	0
வள்ளுவர் மன்றக் கூட்டத்தில் உண்டியல் வசூல்	3	7	0
பிரான்மலை தி. மு. கழகம் மாரிமுத்து	15	0	0
சித்தூர் கே. எம. எர்ரையா	2	8	0
கோ. புத்தூர் (மதுரை) கணேசபாண்டியன்	1	0	0
தோழர் ஆர். எஸ். பாண்டியன் அவர்கள் மூலம் :-			
ஒரு தோழர்	5	0	0
ஒரு தோழர்	1	0	0
கீரனூர் இளஞ்சேரன்	5	0	0
கோசம்பட்டி இரா. சிதம்பரம்	25	0	0
காஞ்சிரங்குடி (கீழக்கரை) என். எம. மொகிதீன்	25	0	0
கலசபாக்கம் தி. மு. கழகம்	5	4	0
கிருஷ்ணன்கோயில் (நாகர்கோயில்) பி. நடராசன்	25	0	0
வேலூர்—குயப்பேட்டை அ. சிதம்பரம்	1	0	0
செங்குன்றபுரம் தி. மு. கழகம் ...	8	12	0
பரமக்குடி கே. எ. வகாப்	2	0	0
புளியமங்கலம் பி. கே. கன்னியப்பன்	5	0	0
ஆக மொத்தம் ரூ.	36,461—	11—	0

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட மாதர்களின் நிதி அளிப்புவிழா

9—1—57 புதன் மாலை 6-மணிக்கு
சென்னை-திருவல்லிக்கேணி கடற்கரையில்

மாபெரும் பொதுக்கூட்டம்

★

தலைவர் : தோழியர் **வெ. குப்பம்மாள்**

பேசுவோர் :

அண்ணா, இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், தோழியர் இராசம்

குறிப்பு :—கூட்டத்தில் சென்னை பஸ் போக்குவரத்து ஊழியர்கள் சார்பிலும் தேர்தல் நிதி அளிக்கப்படும்.

பெண்களுக்குத் தனி இடம் உண்டு.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தேர்வுக் குழு

சுற்றுப்பயணம்

★

வட ஆற்காடு மாவட்டம்

தி. மு. கழக அபேட்சகர் தேர்வுக் குழுவின் தலைவரான பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 11—1—57 வெள்ளி காலை 10-மணிக்கு வேலூர்—டவுன் ஆலில் வட ஆற்காடு மாவட்டத்தின் நிலைமைகளைக் கண்டறிந்து பொதுத்தேர்தலுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபடுவார்.

குறிப்பு :— வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த கிளைக் கழகச் செயலாளர்களும், கழக முக்கியஸ்தர்களும், தேர்தலுக்கு நிற்க விருப்பம் தெரிவித்துள்ள அபேட்சகர்களும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து காணுமாறு பொதுச்செயலாளர் அவர்களால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சி. பி. சிற்றரசு சுற்றுப்பயணம்

★

சன. 8 : திருச்சேரை
11 : கொமாரபாளையம்
12 : கள்ளக்குறிச்சி
13 : திருப்பாலக்குடி
17 : கல்புதூர்
20 : காலை-திருச்சி—சிறப்புச் சொற்பொழிவு

தனித் தொகுதி ஒதுக்கும் முறை

ஒழிய வேண்டும்

தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் கோருகிறது

அகமத்நகர், சன. 6—தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று தனித் தொகுதிகள் நிரணயிக்கும் முறையை கைவிட வேண்டும் என்று அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் கோரியிருக்கிறதாகத் தெரிகிறது.

'அரசியல் சட்டப்படி ஒதுக்கித் தரப்படுகிற இந்தத் தனித் தொகுதிகள் 10 ஆண்டுக் காலத்திற்கு மட்டுமே இப்படி ஒதுக்கித் தரப்படலாம்; இந்த முறையை ஒழிக்க தேர்தல் கமிஷனும் டில்லி சர்க்காரும் சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்,' என்றும், 'கூட்டம் கூட்டமாக தாழ்த்தப்பட்ட மக்கள் புத்த மததைத தழுவி வருவதால் இபபடி தனித தொகுதி ஒது-கித தருவது அர்த்தமற்றதாக— அரசியல் சட்ட விரோதமானதாக ஆகி விட்டது,' என்றும் சம்மேளனத்தின் செயற்குழு முடிவு செய்திருக்கிறதாகத் தெரிகிறது.

கழகக் கூட்டங்கள்

★

பூவிருந்தவல்லி:
கறையான் சாவடியில்
செந்நீர்குப்பம் தி. மு க. திறப்புவிழா.
8—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : சி. பி. வேணுகோபால்
பேசுவோர் :
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
காஞ்சி-கல்யாணசுந்தரம்
பி. சின்னசாமி

★

கவுள்பசார் :
(பல்லாவரத்திற்கருகில்)
9—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : டில்லி
பேசுவோர் :
காஞ்சி-கல்யாணசுந்தரம்
தி. ந. சம்பந்தம்
தோழியர் சத்தியவாணி-முத்து

ஊ. பு. அ. சவுந்திரபாண்டியனுர் நினைவுப் படிப்பக ஆண்டுவிழா

★

இரா. நெடுஞ்செழியன்

கலந்துகொள்வார்

8—1—57 மாலை 6-மணிக்கு, சென்னை—சூளை ஊ. பு. அ. சவுந்திரபாண்டியனுர் நினைவுப் படிப்பக 4-வது ஆண்டுத் துவக்கவிழாவும், தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புவிழாவும், சென்னை-சூளை ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெருவில் (சூளை மில் பின்புறம்) தோழர் எம். எஸ். சின்னசாமி தலைமையில் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் என். சீவரத்தினம், தோழியர் சத்தியவாணி முத்து, மற்றும் பலர் பேசுவர்.

★★★★★★★★★★★★★★★★★★

பார்க்பேர் பொருட்காட்சி : 56-57

சென்னை S. I. A. A. திடலில்
10—1—57 மாலை 6-30மணிக்கு

அண்ணா நடிக்கும்

சந்திரமோகன்

நாடகம்

தனிப்பகுதி : ரூ. 10, 5, 3, 2, 1

முதல் இரண்டு வகுப்புகளும் இலவசமாக 6-1-57 முதல் ஒதுக்கப்படும்

எம். எஸ் மோகன்—காண்டிராக்டர்

★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, நாரியகாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.